முத்தமிழ் க்ஷேத்திர

மதுர

பாஸ்கரதாஸ் அவர்கள்

இயற்றிய

# இந்து தேசாபிமானிகள்

# செந்தமிழ்த்திலகம்.

முதற் பாகம்.



...ாமசாமிக்கோன்,

...ாம், வடக்காவணிமூலவீதி,

மதுரை.

1922.

[As 6.

18424

...பிரஸ், மதுரை.

புலவர்கள் புகழப்பெற்ற முத்தமிழ்க்ஷேத்திர மதுர

பாஸ்கரதாஸரவர்களால் இயற்றப் பெற்ற

தேசாபிமானிகள் செந்தமிழ்த்லகம் விலை அணா 0—6—0.

| | | |
|---|---|---|
| புதிய பெரிய பக்திரசக் கீர்த்தனங்கள் 12-பாகம் | | 0—5—0 |
| லலிதாங்கி, சரித்ரம் நாகரிக வர்ணமெட்டுகளுடன் | | 0—8—0 |
| வள்ளியம்மை சரித்ரம் | ஷை | 0—8—0 |
| அதிரூப அமராவதி | ஷை | 0—6—0 |
| சகுந்தலா சரித்ரம் | ஷை | 0—6—0 |

---

மெஸ்மரிஸம், ஹிப்னடிஸம் என வழங்கும் வசிய சாஸ்திரம்
சித்திரப்படங்களுடன் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. 1—8—0

---

தமிழ்நாடெங்கும் புகழ்பெற்றுள்ள மஹாவித்வான்,

ஸ்ரீமான், சங்கரதாஸ் சுவாமிகள்

மாணாக்கர்களிலொருவரான,

சந்தச்சரபம், ஷண்முகதாஸரவர்களியற்றிய,

# பக்தி ஆனந்தக்கேலிப் பதங்கள்.

நண்பர்களே! கவனியுங்கள்! கவனியுங்கள்!! இது ஒரு புதுமுறையான தமாஷ்! தமாஷ்!! எல்லாம் தமாஷானபாடல்கள். இதுவே நிந்தாஸ்துதிக் கீர்த்தனங்கள். முத்தியை வேண்டிப் பக்தி புரிவார்க்கு முதன்மையான பாடல்கள். ஆலோல வள்ளி கோலாகலமாய் வேலவனோடு ஊசலாடுகையில் ஏசல் பாடுவது போல் காலநாகரிகத்திற்குச் சாலவும் பொருத்தமாய்ச் சிரித்துக் கொண்டு சிவன் விளையாட்டை விரித்துக் கூறும் விநோதப் பாடல்கள். "பக்கத்திருப்பவர் கெக்கெக்கென்று சிரிக்கச்செய் விகடக்கற்கண்டெனும்" விகடமே நிறைந்த விசித்திரப்பாடல்கள். சிந்தைக்கினிய செந்தமிழ்கமழும்சந்தப்பாடல்கள் நிறைந்த இப் பக்தி ஆனந்தக்கேலிப் பதங்கள் படிப்பாருள்ளம் பரவசமாகவும், கேட்பாருள்ளம் கிளர்ச்சிமிகுக்கவும் ஒருங்குதிரட்டிப் புதிதாயச்சிட்டு வெளிவந் திருக்கின்றன. படிக்கப் படிக்கத் திகட்டாது திரும்பத்திரும்பப் படிப்பதன்றிக் கீழேவைக்க மனம் வராதென்பது திண்ணம்! திண்ணம்!! சொற்பக்காப்பிகளே தயாரில் இருக்கின்றன.

விலை அணா 5.

---

காந்தி மஹான் முதலிய தேசாபிமானிகள் தியானம், மதுவிலக்கு, அன்னிய ஆடையை அறவே ஒழித்தல் விலை அணா 0 1 0

# முகவுரை.

"இந்து தேசாபிமானிகள் செந்தமிழ்த்திலகம்" என்னுமித் தேசியகீத நூல் நமது பாரதநாட்டு உண்மையுள்ள தேச ஊழியா களின் அரியபெரிய மகத்துவச செய்கைகளைப் பற்றிய தமிழி ஞலாக்கப்பெற்ற திலகம்போன்ற பாக்கள் என்று பொதுவாயும், அவை பெரும்பாலும் இயல், இசை, நாடகம் என்று பிரிந்துளமுத் தமிழ்ப் பாகுபாட்டின்கண் நாடகத் தமிழாணுக்கப் பெற்றுள பாக் கள் என்று சிறப்பாயும் காட்டா நின்ற ஒரு "சொற்றொடர் வாக்கி யம்" என்பது கற்றுணர்ந்த வல்லுநரால் கருதப்படுங் கூற்றேயாம்.

இனிப் பண்டைக்காலத்துச சங்கப்புலவர்களிற் பல்லோரா லாக்கப்பெற்றுச் செந்நாப்புலவர்களாலேயே சங்கநூலென்றேத் தப் பெற்றுள பரதம், முறுவல், சயந்தம், குணநூல், கூத்தநூல், நூல் என்பவைகளும், பஞ்சகாவியங்களில் ஒன்றாகிய சிலப்பதிகா ரம் என்பதும் நாடகத் தமிழேயன்றி ஏனைத்தமிழன்றென்ப தைச் சிறிதாராய்ந்துழி, இந்நாடகத்தமி ழீண்டெத்துணைய சிறப்பு வாய்ந்துள தென்பது நன்கு வெளிப்படும். காரணம் கருதுவே மாயின் இயல், இசை என்பன கேள்வியின்பமே யன்றி, இது போன்று அஃதுடன் காட்சியின்பமும் பயக்க வல்லவை யல்ல வென்பதே ஒரு தலை சிறந்ததாய் இந்நாடகத்தமிழிற்கு வேறு ஒரு தனிப்பெருஞ்சிறபபு வாய்ந்துளதூஉ முய்த்துணரத் தக்கதேயாம்.

இத்தமிழ் 'வேத்தியல், பொதுவியல்' என்ற இருபிரிவின தாகி, நிலைநின்ற பேரிலக்கணத்தின் கூறுபாடாகவேவழங்குகின்ற தென்பதை ஒரு சிறிதும் உணராது தற்காலத்து "நாடகத்தமிழ் தானே" என்று இழிவாய்ப்பேசித்திரிகின்ற இராகதாள உணர்ச்சி யற்ற சில பண்டித சிகாமணிகளுக்கே இங்ஙனம் யாம் ஞாபக முறுத்துகின்றேமாக. கங்குகரையற்று இனிதே தோன்றி வளர்ந்த இந்நாடகத்தமிழ்ப் பண்டைக்காலத்துச் சீர்திருத்தஞ் செய்யப் புகுந்த போலியாளரிற் சில்லோரான சைனரும், ஆரியரும் ஒருங்கு சேர்ந்து, எடுத்துக்கொண்ட பெருமுயற்சியினுன் அந்தோ! வீழ் நிலையடையத் தலைப்பட்டது, என்! பின்னர் அழிந்தொழிந்தது

என்றும் இளத்தலாம். இதற்குக் காரணம் என்னையோவெனில் தமிழ்ப்புலவருள் ஒருவராய் உரையாசிரியருள் தலைநின்ற நச்சினார்க்கினியரே இயற்றமிழேயன்றி இசைத்தமிழும் நாடகத்தமிழும் "இன்பத்தாற் காமத்தை விளைவிக்குங் கருவி" என்று தடுமாற்றமடைந்ததேயாகும். அது நந் தமிழ்நாடு செய்த தவக்குறையேயன்றி வேறென்னென்றுரைத்தற்பாற்றும்! என்றாலும் "நூலுரை போதகாசிரியர் யாவரும் மூக்குணவசத்தான் முறைமறந்தறைவரே" என்னுஞ் சூத்திரத்திற்கிலக்காய் இக்கூற்றறிவுடையாரால் அருவறுக்கப் பெற்றதே என்ப. இது காரணம் பற்றியோ, அறியாமைபற்றியோ பண்டிதராயினர் இதை இகழ்ந்து கைவிடவே, இக்காலத்து இது எடுப்பார்கைப்பிள்ளையைப் போல் ஒவ்வொரு பாமரர் வாய்ப்பட்டும் பற்பல இழிவடையாநின்றது. ஆனால் சிறிது சிறிதாய் மீண்டுமிதற்கு நற்காலம் வந்துற, சற்றேறக்குறைய கி.பி. பதினேந்தா நூற்றாண்டினெல்லை தொட்டு, இற்றை நாள்வரை இந்நிலவுலகு செய்த நெடுந்தவமேயெனச் சைவசமய குரவர்களாலும், வைணவசமய ஆழ்வாராதியராலும், அருணகிரிநாதர், குமாரகுருபர சுவாமிகள், சீகாழி அருணாசலக்கவிராயர், திரிகூடராசப்பக்கவிராயர்முதலிய பெரியாராலுமாக்கப்பெற்ற இசைத்தமிழும், நாடகத்தமிழும் உலகத்தை உய்ப்பித்து நின்றது. இம்மட்டோ? வடமொழியாசிரியரான காளிதாஸப்புலவரும், ஆங்கில மொழியாசிரியரான ஷேக்ஸ்பியரும் இந்நாடகவியலுக்கோர் நாயகரென்றே அவர்பால் யாம் நன்றிசெலுத்தக் கடமைப்பட்டுளேம். இனியேனும் இக்காலத்திய எம் இலக்கண வித்வசிரோமணிகள் இந்நாடகத்தமிழை இயன்றவாறு பயிலவும், பயின்றவாறு தரிக்கவும் முன்வரவேண்டுமென்று யாம் வற்புறுத்துகின்றேம். மேலும் நாடகத் தமிழின் அருமையறியா இக்காலத்தில் ஏதோ புதிதுபுதிதாய் "இலக்கியவிலக்கண வரம்பினுட்பட்டோ அல்லதஃதின் முரண்பட்டோ இந்நாடகத்தமிழிற் சிற்சில வெளிவந்துகொண்டிருக்கின்றன" வென்பதை மட்டும் யாம் கருதுகின்றபோது எமக்கோர் வகையான் மனவாற்றலும், மலிந்த மகிழ்ச்சியும் உண்டாகின்றது.

இனி இவை நிற்க, புலவர்கள் புகழப் பெற்ற முத்தமிழ் க்ஷேத்திர மதுரா பாஸ்கரதாஸ் அவர்களால் இயற்றப்பெற்ற இக்

நூல் எம் பார்வைக்குக் கிடைக்கப்பெற்று, இதனோடு யாமாராயப் புகும் ஒரு பெருந் தருணம் வாய்த்தது "பயில்பெறு வசனம் பநுவல் பல்லவி ஆதியவியலிசை நாடகமென்ப" என்னுஞ் சூத்திரத்திர்கிணங்க ஆங்காங்கெடுத்தாளப்பெற்ற இராகதாள நவீனவர்ண மெட்டுகளின் ஆதியமைப்பு ஒரு சிறிதேனும் முரண்படாது இசை நுணுக்கச்சந்தச்சுவை பொருந்துமாறு அமைந்திருக்கிற ஒரு சிறிய நூலாயும், பலவாற்றானும் புராதன சுதந்தரங்களை இழந்து நின்ற இந்திய மக்களாகிய நாம் ஒற்றுமையுணர்ச்சி பெற்று, நமக்கேற்பட்ட ஆதி சுதந்தரங்களைப் பெறுமாறு கங்கணங்கட்டி, உண்மையாய்ப் பாடுபட்டுவருகிற பல சில தேச ஊழியர்களையும், அவர்களது அற்புதச் செய்கைகளையும் பற்றிப் பாடுந்தோறும் பத்திச் சுவை பெருகித் தேச உணர்ச்சியும் மன ஊக்கமுமெழுப்ப வல்ல ஒரு பெரிய நூலாயுமிருக்கிறது.

"கடவுள் இல்லை" என்று சாதிக்க வல்ல நாஸ்திகப்பூடுகள் அதிகரித்துவந்த அக்காலத்தில் சமயகுரவர்களும், ஆழ்வாராதியர்களும் அவதரித்துத் தேவாரம், திருவாசகம், பிரபந்தம் முதலிய தமிழ்வேதப் பாசுரங்களினால் "கடவுள் உண்டு" என்று அவர்கள் ஒப்புக்கொள்ளத்தக்கவண்ணம் பத்திச்சுவை ஒழுகப்பாடி, அநேக அற்புதச் செய்கைகளைக்காட்டி, உலகத்தை உய்ப்பித்தவாறு "நமக்குச் சுதந்தரமே இல்லை" என்று சாதிக்கவல்ல தேசவிரோதிகள் அதிகரித்துக்கொண்டுவருகிற இக்காலத்தில் 'வந்தேமாதரம்' என்னுமோர் மந்திரசக்தியால் "நமக்குச் சுதந்தரம் உண்டு" என்றொப்புக்கொள்ளுமாறு செய்வித்துப் பாரதபூமியை உய்ப்பிக்க ஸ்ரீ மகாத்மா காந்தீ, தாதாபாய்நௌரோஜி, கோபாலகிருஷ்ண கோகேல், பாலகங்காதர திலகர், மகமதாலி, சவுக்கத்தாலி முதலிய பல சில தேச ஊழியர்கள் அவதரித்து, அநேக அற்புதங்களைச் செய்துளாரென்பதும், செய்து வருகின்றனரென்பதும் யாவரும் ஒப்புக்கொள்ளத்தக்க ஒரு கூற்றேயாம். இனி நம் இந்திய மக்களின் ஏடேற்றத்தை முன்னிட்டு, அவர்கள் செய்துள, செய்துவருகின்ற பாரிய காரியங்களில் ஒரு சிறிதேனு மீண்டெடுத்துரைத்தல் இச்சிறு நூற்கு மிகை என்று நிறுத்துகின்றேம்.

முந்தைக்காலத்து முதல், இடை, கடை என்ற முச்சங்கமிரீஇய இறையனார்; அகத்தியனார், தொல்காப்பியனார், முதலாக நக்கீரனார், இடைக்காடனார், அவ்வைப்பிராட்டியார், திருவள்ளுவனார் ஈறாகஉள சங்கப்புலவர்கள் பல்லாயிரத்துப் பன்னூற்றுப் பல்பத்தெண்மர்களைப் பற்றியும், அவர்களியற்றி யருளிய அகத்தியம், தொல்காப்பியம் முதலாகத் திருக்குறள், நாலடியார் ஈறாஉள்ள பல இலக்கணவிலக்கிய நூல்களைப்பற்றியும், சிறிதளவேனுந் தெரிந்து கொள்ளக் கற்றோர்க்கே அரிய தன்மையனவாயிருக்க, அவர்களுள் ஒருவராய அவ்வைப்பிராட்டியாரைமட்டும் நர்தமிழ்நாடு முழுதும், பிறநாடும் ஐந்துவயதுக் குழந்தைமுதல் நன்குணர்ந்திருப்பது போல இக்காலத்துந் தமது வாக்கு சாதுரியத்தினால் சொற்சுவை பொருட்சுவையோடு உலகமனைத்தினும் இன்ப உணர்ச்சி யுண்டு படுத்த வல்ல பல்லாயிர இலக்கியவிலக்கண வித்வசிரோமணிகளுக்கிடையில் இந்நூலாசிரியராய முத்தமிழ் க்ஷேத்திர மதுர பாஸ்கரதாஸ் அவர்களை மட்டும் நந் தமிழ்நாடுமுழுதும் யாழ்பாணம், கொழும்பு, ரங்கூன், சிங்கப்பூர் முதலிய பிறநாடு முழுதும் ஐந்து வயதுக் குழந்தை முதல் நன்குணர்ந்திருக்கிறார்கள் என்பதை இல்லை என்று மறுக்கவர மனந் துணிபவர் யாவர்?

இனி இவைநிற்க, "இற்றைநாளிலும் கல்வியறிவில்லாத எத்துணையோ ஸ்திரீகளுங்கூடக் கேள்வி வலியாற் றம்பேச்சுகளுக்கிடையில், 'அவ்வையார் வாக்கு' என்று கொண்டாடப்பெற்ற ஆத்திசூடி, கொன்றைவேந்தன், வாக்குண்டாம், நல்வழி முதலியநூற்களினின்று எத்துணையோ வாக்கியங்களை எடுத்தாளுகின்றனர் போல் மதுரை, திரிச்சி, தஞ்சை, கோயம்புத்தூர், கும்பகோணம், சென்னை, சேலம், இராமநாதபுரம், திருநெல்வேலி, தூத்துக்குடி, திருவனந்தபுரம், கொச்சி முதலிய ஜில்லாக்கள்தோறும் எத்துணையோ ஸ்திரீகளுங்கூடக் கேள்விவலியால் மணவறையில் மாப்பிள்ளைக்கும், பெண்ணுக்கும் நலுங்கிடுகின்ற சமயம் இந்நூலாசிரியர் வாக்குகளான "பக்திரசக்கீர்த்தனங்களையும், இதையும் எடுத்தாளுகின்றனர்" என்றால் ஈண்டிதன் மகிமை யாமெவ்வாறிசைப்ப வல்லேம்? ஆகவே! அக்காலத்து அவ்வைப்பிராட்டியார் வாக்கும், இக்காலத்து 'மதுரபாஸ்கரனார் வாக்கும் "உலகமுழுதும் பரவு

கின்ற ஓர் உன்னத சக்திவாய்ந்தன'' என்பதைமட்டும் யாமொப்புக்கொள்ளக் கடப்பாடுடையேமாக.

இம்மட்டோ? பாண்டியனீன்ற மீநாட்சி, சோக்கலிங்கக்கடவுளே, வெண்ணிலாச்சூடிய நாதா, ஸாமிவிவேகானந்தா, ஜெயகாந்திமகான் போலுண்டோ, என்ற 'வர்ணமெட்டு' என்று தற்கால சந்தச்சரப வித்வ சிரோமணிகள் தமது கீர்த்தனங்களி னூடு எடுத்தாளப்பெற்று, வெளிவந்துளபடியால்முன்னரும், இதுகாறும் ஒப்புயர்வற்ற உயர்தனிச் செம்மொழியாய நந்தமிழ்ப்பாஷைக்குக் கீர்த்தனங்களில் மட்டும் இந்துஸ்தான், தெலுங்கு முதலிய பிறபாஷைகளிலிருந்தே வர்ணமெட்டுக்கள் எடுத்தாளப்படுகின்றனவென்ற ஒரு பெருங்குறையை இவர் நிவர்த்தித்து வருகின்றனர் என்பதை நினைக்குந்தோறும் எமக்கேற்படுகின்ற உள்ளக்கிளர்ச்சி ஒரு வரைகிறுவி அளவிடற் பாலதன்றாம்.

இந்நூலைப்பற்றிய விசேட விடயமாக யாம் இதுகாறும் மேற்கூறிப்போந்தனவனைத்தும் கற்றுணர்ந்த வல்லுநரால் எவ்வாறு கருதப்படினும் படுக. இற்றைக கிருபதாண்டிற்கு முன்னர் வங்காளம், பஞ்சாப், முதலிய வடஇந்தியாவில் லாலாலஜபதிராய், விபினச்சந்திரபால், கோபாலகிருஷ்ண கோகேல், பாலகங்காதர திலகர் முதலிய தேசாபிமானிகள் பலர் முன்னின்று நம் மிந்திய நாட்டிற் குழைத்துவருகின்றனர் போல் சென்னை, மதுரை, தூத்துக்குடி முதலிய தென்இந்தியாவில் ஒரு தேசாபிமானி இல்லையே என்று நமது பாரதமாது ஏங்கிக்கொண்டிருந்த தருணம் தூத்துக்குடி ஸ்ரீமான் வ. உ. சிதம்பரம்பிள்ளையவர்கள் தோன்றி நமக்குத் தேசவுணர்ச்சி தந்துகின்றவாறு, இதுகாறும் வங்காளம் பஞ்சாப் முதலிய வட இந்தியாவில் கவிச்சக்ரவர்த்தி ஸ்ரீமான் ரவீந்திரநாத்தாகூர் அவர்கள் தோன்றித் தம் இன்னிசைப்பாக்களினால் இந்திய மக்களுக்குத் தேசபக்தியதிகரிக்குமாறு செய்துகொண்டு வருவதுபோல சென்னை, மதுரை முதலிய தென்னிந்தியாவிலும் தம் இன்னிசைப்பாக்களினால் தேசபக்தியதிகரிக்குமாறு செய்யவல்ல ஒரு கவிச்சக்ரவர்த்தி இல்லையே என்று நமது பாரதமாது ஏங்கா வண்ணம் "இந்நூலாசிரியர் துலங்குகின்றனர்" என்

பதைமட்டும் யாவராயினும் ஆம் என ஒப்புக்கொள்ளாமல் முடியாதென்று யாம் துணிந்து கூறுகின்றோம். ஆனால், இந்நூலாசிரியரான முத்தமிழ்க்ஷேத்திர மதுர பாஸ்கரதாஸ் அவர்களைப் போல் கவித்திரவழியில் நாமும் பெயரெடுக்க வேண்டுமென்று விடாமுயற்சிசெய்து, ஹாலவாய்க்ஷேத்திர முத்தமிழ்வித்துவான் ஹாலாஸ்யக்ஷேத்திர இருதமிழ்வித்துவான், ஒரு தமிழ் வித்துவான், அரைத்தமிழ் வித்துவான் என்ற பல மகுடப் பெயரிட்டு, வெளிவந்துள சில தோத்திரப்பா, கீர்த்தனப்பா, திலகப்பா முதலியன இத்திலகப்பாவாகிய நமது *பாஸ்கரனுக்கு முன் சிறுசிறுமின்மினிப்பூச்சிகளை யொத்தனவேயென யாம் பரிதாபப்படுகிறேமாக. காரணமுற்றும் ஈண்டெடுத்துக்காட்டல் இயலாதுபற்றி, ஒன்றிரண்டுமட்டும் காட்டிநிறுத்துவேம். ஒரு தாஸர் தம் நூலுக்குச் செந்தமிழ்த் திழகமெனப் பெயரிட்டு, ஓரிடத்துத் தமிட்கொடை என்றும், மற்றோரிடத்துத் தமிட்புலவரென்றும் பிறிதோரிடத்துத் தமிழ்த்திலகம் என்றும், பட்ணம், கொட்பறை, ரெண்டு என்றும், எச்சவிகுதி முற்றுவிகுதி யறியாதும் ஏதேதோ புதிதுபுதிதாய் விளம்புகின்றனர். யோக்யம் என்ற வடமொழி, தமிழில் யோக்கியம் எனவந்து அதுசந்தம்நோக்கி, மீண்டும் யோக்ய மென்பதுபோல் பட்டணம் என்ற தமிழ்மொழி பட்ணம் எனவும் வருமென்று இவர் கருதினர்போலும்! இக்கூற்று பிறர் தன்னை இலக்கணம் படித்தவனென எண்ணவேண்டுமென்று ஒருவன் "ஐயா! நன்றையிலே கன்றுகுன்றி மன்றுதின்று மன்றுமன்றுய்ப்பேன்றது" என்று பேசியவாறெக்கும். ஒரு தாஸர் தமது திலகத்தில் "ஜாதிமத பேதங்கள் அற" என்பதற்காக மருண்டு, தங்கிய என்றும், நீதியுள்ளவன்" என்பதற்காக மருண்டு, நீதாகுணன் என்றும் பாடியிருக்கிறார். மேலும் 'து' ஒன்றன்பால் படர்க்கைவிகுதி என்றும், 'வை' பலவின்பால் படர்க்கை விகுதி என்றுங் கூடப் பாவம்! இவர் அறிந்திலர் போலும் "நீதாகுணன்" என்பது தீர்க்கசந்தியில் நீத-அகுணன் எனப்பிரிந்து, நீதமற்றவன் என்று

---

* பாஸ்கரன் – சூரியன்.

யிற்று. இது குளிக்கப்போய்ச் சேறுபூசிக்கொண்டவாறும். மகாத்மா காந்தியும் மற்றுமுள்ள தேசாபிமானிகள் தியானம் என்று ஒரு தாஸர் தம்நூற்குப் பெயரிட்டிருக்கின்றனர். அதனுள் தான்தோன்றித் தாஸர்களின் ஆனந்தக்களிப்பு, என்ற தலைப்பெயருடன் காதறுப்பதற்கு வில்லியும், வெட்டுதற்கு ஒட்டக்கூத்தனும், குட்டுதற்குப் பிள்ளைப்பாண்டியனும் இல்லையே என்றும், எல்லோரும் தாஸராய்விட்டனரே என்றும் அத்தாஸர் மிக்க பரிதாபப்படுகின்றனர். அந்தோ! என்ன பரிதாபம்! எத்துணையவல்லவர்! இவர் இயற்றியுள்ள புத்தகத்தின் பெயரில் காந்தி-யும் என்பதில் உள்ள உம் என்ன உம்மோ அறியேம். பள்ளிக்கூடத்தில் படிக்கின்ற மாணவச்சிறுவர்களில் ஒருவன் தன் உபாத்தியாயரிடத்தில் "ஐயா! இது கோவிந்தன், அவனைச்சார்ந்த சிநேகிதர்கள் சாமான்" என்று சொல்வதற்காக "ஐயா! இது கோவிந்தனும், அவனைச்சார்ந்த சிநேகிதர்கள் சாமான் என்று சொல்லுவானுனல் அவனை உபாத்தியாயர் ஓங்கித் தலையில் ஒருகுட்டுக்குட்டாது விடுவரோ? இன்னும் அதிலுள்ள கடைசிப்பக்கத்தில் ஒருதாஸர் "நான் எழுதிய முன்னறிக்கை நோட்டீஸ்" என்று ஓர் புராணத்தைச் சங்கீத வர்ண மெட்டுகளில் அவர் வெளிப்படுத்தியிருப்பதாய் அறிவிக்கின்றனர். அதிலுள்ள .........வர்ணமெட்டுக்களாலும்........விளங்கக்கூடியதாலும் என்பவைகள் நகுதற்கிடமாயிருக்கின்றன. மேலும் வேண்டுபவர்........பெற்றுக்கொள்ளலாம் என்பதற்காக வேண்டுபவர்களுக்குப்...... பெற்றுக் கொள்ளலாம் என்று எழுதியிருக்கின்றனர். இவரும் ஒரு மாணவராயிருந்து, உபாத்தியாயரிடம் இப்படிச் செப்புவாரானுல் இவரை அவர் ஓங்கித்தலையில் ஒரு குட்டுக்குட்டாது விடுவரோ? இவர் எத்துணையவல்லவர்' என்பதைச் சிறிதாராய்ந்திழி வியக்கத்தக்கதேயாம். "அவனும் பெற்றுன் நானும் பெற்றேன்" என்பதுபோல் தானியற்றிய நூலுக்கும் முகவுரை வேண்டுமென்று தெருத்தெருவாய்த் திரிகின்ற இப்பெருந் தாஸர் முறையே தமிழாராய்ந்த ஓரறிவுடையாரிடத்து "இவர் பாடிய பாடல்களிலே சிறுச்சிறுகுற்றங்கள் காணப்படினும்" என்றுகுறிப்

---

* றி - இனவழு.

பித்துள்ள ஓர் முகவுரையை வாங்கிச் சேர்ப்பித் திருக்கின்றனர். இஃதிவர்க்கென்ன பெருமையோ அறியேம். "இவைமுற்றும் பொறாமையுருவெடுத்த போலியாளர் தன்மை" யெனக்கற்றோர் புறக்கணிப்பாராக. இத்தகையார் சிறிதேனும் தமிழாராய்ந்து, திலகம் பாடில் அவர்களுக்கும் யாமளவுகடந்த நன்றி செலுத்துவேம்.

☞ இம்முகவுரை முழுதும் வாசித்தறிந்த சில பண்டிதசிகாமணிகள் "நச்சினார்க்கினியர் நாடகத்தமிழை இகழ்ந்தாரென்பதும், அவ்வையார் வாகுகெனக் கொண்டாடப் பெறுகிற ஆத்திசூடி, கொன்றைவேந்தன் முதலியவற்றிற்கு இந்நூலாசிரியர் வாக்கை உவமானித்திருப்பதும், சமயகுரவர்கள் நாலவருடன் இராமலிங்கசுவாமிகளைச் சேர்த்திருப்பதும் பொருந்தாதென்றும், 'கூற்று' உய்ப்பித்துநின்றது' என்றவிடத்து இலக்கணவிதிக்கு மாறுபடுகிறதென்றும்" மற்றும்பிற நேரிலும், எழுத்துமூலமும் கேட்டுப்பின்னர் அவர்கள் ஒப்புக்கொள்ளுமாறு அவர்கட்கு யாம் தந்துள ஆதாரங்கள், இலக்கணவிதி முற்றும் இதன் இரண்டாம்பாக முகவுரையில் விரிவாயெழுதியுளேம். கற்றோரதனைக் கண்டுவப்பாராக.

ஆழ்வார்தம் மெய்ம்மொழியும் *ஐவர் திருமொழியும்
வாழ்கடவுட் பக்தியுற வைத்தனபோல்—தாழ்வில்லா
நாமினிநம் நாட்டுணர்வு நன்குணர வைத்ததிவண்
மாமதுர பாஸ்கரனூர் வாக்கு.

இத்தகைய நூல்களையும், பிறவும் தமக்குரிமைப்படுத்தி, அச்சிட்டு வெளிப்படுத்துவதில் உன்னதமுயற்சி எடுத்துவரும் ஸ்ரீமான் இ. ராமசாமிக்கோன் அவர்களுக்கு யாம நீடுழி நன்றிசெலுத்தக் கடப்பாடுடையேமாக.

இங்ஙனம்,

நா. கிருஷ்ணசாமி நாயுடு,
தமிழபிமானி,
மதுரை.

---

*ஐவர் சமயகுரவர் நால்வர், இராமலிங்கசுவாமிகள்.



முத்தமிழ் க்ஷேத்திர மதுர பாஸ்கரதாஸ்.



உ

வேலுமயிலுந் துணை.

# இந்துதேசாபிமானிகள்

# செந்தமிழ்த்திலகம்.

## முதற்பாகம்.

வெண்பா.

தேசாபி மானிகள்மேல் தெய்வத் தமிழ்த்திலகம்
கூசாதெ ஞமலர்ந்து கூறுதற்குப்—பேசும்
பிரணவத்தான் முன்னுதித்தான் பேழ்வயிற்றான் எங்கள்
சரணகத்தான் ஐங்கரத்தான் சார்பு.

---

## பாரதமாதா துதி.

1. சோமசுந்தரனே என்ற மெட்டு.

இராகம் - கல்யாணி - தாளம் - ரூபகம்

பல்லவி.

பாரததேவியே கண்
பாராய் ஆசி தாராய் மேவியே (பார)

அநுபல்லவி.

தாரதம்மியம் பொருந்துங்காரணி
தர்மரூப சௌ பாக்யபூரணி
மாரதப்புவிக் கினியவாரணி
மாட்சி யாச்சு யாட்சிப் பேரணி (பார)

சரணம்.

தேவர் முனிவ ருனக்குச் சேயே
தேசபக்தரின் சிறந்த தாயே
மூவர் புகழ முழங்கு வாயே
முன்பு நம்புந் தென்பு நீயே (பார)

ஒவியத் தமிழ் மதுரப்பூமி
உண்மைத் தொண்டனும் பாஸ்கரசாமி
காவியஞ் செயம் பெறச்செய்வாமி
கான ஞான மான நேமி (பார)

---

## வந்தேமாதரம்.

2. காட்சிகண்காட்சியே என்ற மெட்டு.

இராகம்-தேசிகம்-தாளம்-ரூபகம்.

பல்லவி.

வந்தேமாத்ரமே வாழ்வுக்கோராதரமே (வ)

அநுபல்லவி.

சந்தேகமில்லையினிச் சார்வோஞ்சகோதரமே (வ)

சரணம்.

நந்தேயமக்கள்பெறு  நன்மைக் கீதுமந்திரம்
நாடோறுஞ் சொல்லப் பாப  நாசமாகுந் தந்திரம்
இந்துமுஸல்மான்களுக்  கீய்ந்திடுஞ் சுதந்திரம்
எங்கும்பேரிகை கொட்டும்  மங்கள நிரந்தரம்

ஈடில்லா மகரிஷியின் வாக்கும்-மற்றுங்
கூடியே அடிமைத்தனம் போக்கும்- இன்று
நாடியே பொருளை வச மாக்கும் - இதில்
நம்பு நவ சக்தி பல நோக்கும்

நாவினிக்க  நீடும்
நமக்குத்துணை  தேடும்
பாவினிக்கப்  பாடும்
பாஸ்கரன்கொண் டாடும்—மந்த்ர  (வந்)

---

# உதவிமறுத்தலியக்கவாழ்த்து.

3. அக்கனுலாய பனுவா என்ற மெட்டு.

இராகம்-தேசிகபியாக்-தாளம்-ஆதி.

பல்லவி.

ஒற்றுழையாத தருமம்—புவிக்
கோதுகாந்தி நாதனருமைச் சாதுதேர்ந்த வேதமருமம்(ஒ)

அநுபல்லவி.

சற்றுமே மனந் தயங்கி டாதிதைக்
கற்றிடவென்சிரமம்—நமக்
காகவகுத்துக்கணித்தவுத்தமர்பணித்ததத்துவம் பிணித்தகிரமம()

தோஹைறு.

மகாநாடுகூடியே தீர்மானம் செய்ததால்
வாழ்த்தியே சிரசில்வைப்போம்
மாறுதகட்டளை மீறுததிட்டமாய்
மஹான் சொன்னஉறுதி நிற்போம்

{ஷெ பாட்டுத் தொடர்
அநுபல்லவி யெடுப்பு.}

மதுர பாஸ்கரனே—தமிழ்
மாசறப்புகழ் தேசபக்தசு தேசநித்தியம் பேசுசத்தியம்(ஒ)

---

## சுவாமி விவேகானந்தர் துதி.

மைகேந்த பேக்குருபான் என்ற மெட்டு.

இராகம்-தேசிககமாஸ்-தாளம்-ஆதி.

பல்லவி.

சாமி விவேகானந்த - சகலமதசித்தாந்த (சாமி)

அநுபல்லவி.

தருமராம கிருஷ்ண மோன
பரமஹம்ஸ சிஷ்ய ஞான (சாமி)

சரணம்.

தாய் நாட்டுச் சொக்கத் தங்கம்
மேல் நாடெங்கும்ப்ர சங்கம்
செய்த சிங்கம்

தன்மனந்தா　　னிறுத்தி
மும்மலப் பேய்　　துரத்தி
ஜென்மமே சீர்　　திருத்தி
　　தவம்புரிந்தார்
தருமராம கிருஷ்ணமோன பரமஹம்ஸ சிஷ்யஞான(சாமி)

செந்தமிழ்ச்　　சேதுபதி
தினமுங்கொண்　　டாடித்துதி
　　சேர்ந்தநிதி
தித்திக்கும் பாஸ்கரன் சொல்
பத்திக்கும்　　இந்தியரின்
விர்த்திக்கும்　　அவதரித்த
　　திருமூர்த்தி
தருமராம கிருஷ்ணமோன பரமஹம்ஸ சிஷ்யஞான (சாமி)

---

# மஹாத்மா காந்தி துதி.

4. ஆண்டிப்பண்டாரம் என்ற மெட்டு.

இராகம்-செஞ்சுருட்டி-தாளம்-ஆதி.

பல்லவி.

காந்திச் சன்யாசி-　　நம்மைக்
காக்குஞ் சுதேசி-　　மஹாத்மா　(காந்தி)

அநுபல்லவி.

வாய்ந்த குஜராத்திலே வைசிய வம்சத்திலே
சாந்தாவ தாரம் செய்த சத்தியாக் கிரகநிலே　(காந்தி)

தன்னு ருயிரிந்தியர் தவிக்கப் பொருமலுயர்
தென்னுப்ரிக்காவில்நயஞ் செய்திட்டாரென் றுஞ்செய (கா)

கெய்ராவில் நம்மவர்க்கே கிருபை புரிந்தமஹான்
தெய்வீகத் தன்மைபெற்ற தீரவுதார சஹான் (கா)

கற்றறிந்த பஞ்சாப்பும் கலிபாவுந் துயர்தணியும்
ஒற்றுமையாத் தர்மமதை ஓங்கி வளரச்செய்யும் (கா)

இந்துமுகம் மதியருக்கா யென்றுஞ் சுதந்திரமே
தந்தருள வந்தகரன் சந்த்ரமோகன் மந்திரமே (கா)

எத்திசைக்கும்எவ்உயிர்க்கும்இஷ்டனுன்மகரிஷியைப்
பக்திசெய்யும் பாஸ்கரனுல் பாடிக்கொண் டாடிப்புகழ் (கா)

---

6. கோந்தாரும்பூங் கணையால் என்ற மெட்டு.

இராகம்-தேசிகதோடி-தாளம்-ஆதி.

பல்லவி.

ஜெய—காந்தி மஹான் போலுண்டோ
ஜீவ- காருண்யமே
தேவ- லாவண்யமே
சேவை- யாற்புண்யமே—ஸ்ரீமத் (காந்தி)

அநுபல்லவி.

சாந்தகுபேரன் சத்யாவதாரன்
சரித்திரப்பெருந் தன்மை-புவிநன்மை
பெறும்உண்மை-இனிமென்மேல்
தர்ம-சாசனச்சிலை நாட்டி
உபந்-யாசப் பூங்கணைபூட்டி

மத-சாரந்தனி லேசிந்தனை
மீறும்படி போர்செய்திடு
சங்கம்புகழ் - தங்கிந்திய
ரின்சிங்கமெ னுங்கங்கண (காந்தி)

பாஸ்கரசாமி பாவணிநேமி
பரதசுகிர்தபாலன்-குணசீலன்
அதிலோலன் அநுகூலன்
மலர்ப்-பாதம் நம்பிடில் மோட்சம்
உயர்-காதலின்பக் கடாட்சம்
தினம்-பாலித்திட வேசித்தமு
மேலிட்டதி ஞலித்ததி
பாரிற்பிரிய மீறித்துரை
பேரிற்பதங் கூறுகின்றேன் (காந்தி)

---

7. சரி சரி சாமுத்ரி காலக்ஷணம் என்ற மெட்டு.

இராகம்-தேசிகம்-தாளம்-ஆதி.

பல்லவி.

காந்தியே கரன்சந்ர மோகனதாஸ் (காந்தி)

அநுபல்லவி.

கவனுதிப நவநாயக சுவராஜ்ஜிய தவமாமுனி (காந்தி)

சரணம்.

வாய்ந்திடும் பரதநாடு மக்களுக்கோ ராதரன்
வழங்குஞ்சத்தியாக்கிரக மாறிடாத் தராதரன்
வணிகசீதரன் - ஆதி
மனுவின் சோதரன்-நீதி

வகுத்தான்வழி தொகுத்தான்மொழி
புகுத்தாய்வதில் மிகுத்தான்புகழ் (காந்தி)

பொறுமையான இந்தியாவின் வறுமை நீக்கும்புண்ணியன்
புத்தரேசு மகம்மதுவை யொத்தஞான கண்ணியன்

புனிததண்ணியன் - இந்து
மனிதநண்ணியன் - நல்ல

பூமாதுடன் பாமாதுங்கண்
டாமோதிக்குஞ் சீமான்ஜெய (காந்தி)

திருமதுரபாஸ்கரன் தினம்பணியுஞ் சிங்கமே
தேசநன்மைக்காகவெங்குஞ் செய்குவான் ப்ரசங்கமே

தேடுந்தங்கமே- சபை
கூடுந்துங்கமே-ஜெகத்

த்யாககுண யோகநல்வி
வேகநமக் காகவந்த (காந்தி)

---

## லாலா லஜபதிராய்.

8. மதீனமே மோராசையயா என்ற மெட்டு.

இராகம் - அமீர்கல்யாணி - தாளம் - ரூபகம்.

பல்லவி.

ராஜவிசுவாச லாலா லஜபதியே லாலா லஜபதியே(ரா)

அநுபல்லவி.

தேசாபிமானி திடசித்தஞானி (ராஜவிசு)

தொகையறா.

பூஜா பலம்பெற்ற பாஞ்சால நன்னாடு
புகழ்வீரசிங்கம் நீயே
பூர்வீக இந்தியா நன்மைபெறச் சிறையிலும்
போந்தவா பரதசேயே

பாட்டுத் தொடர்.

புந்திமகிழ்ந்த சுதந்தரமெங்கும்
உந்தியுகந்திட வந்துவிளங்கும்

பல்லவி யெடுப்பு.

பூவில்பாஸ்கர வாழி
ஜீவியனே நீடுழி
ராஜ விசுவாச லாலா லஜபதியே. (ரா)

---

9. பங்காருமோரிப்பியாரி என்ற மெட்டு.

இராகம்-கல்யாணி-தாளம்-ஆதி.

பல்லவி.

நாடெங்கும் புகழுங் கிரீடாதிபநிதி
லாலா லஜபதி (நா)

அநுபல்லவி.

நீடியபாஞ்சால தேசத்துக்கேநல்ல
நேத்திரம்போற்பிர காசிப்பவன்
நீசன்முதலாக ஈசன்வரையிலும்
நேசனைப்போல உத்தேசிப்பவன் (நா)

தந்தைதாயில்லா அனாதைச்சிறுவரைத்
தற்காத்துக்கல்விப் பொருளளிப்போன்
சாந்தசுலக்ஷணம் வாய்ந்தவிலக்கணச்
சாஸ்திரஞானக் கடல்குளிப்போன் (நா)

இந்தியமக்கள் சுயேச்சையடைந்திட
ஏற்றிங்குழைக்குஞ் சகோதரனே
இன்பசுதேசவிளம்பர பாஸ்கரன்
நம்புஜெயவந்தே மாதரனே. (நா)

---

## தாதாபாய் நௌரோஜி.

10. தாரான போலுதாரா என்ற மெட்டு.

இராகம்-தேசிகதோடி-தாளம்-ஆதி.

பல்லவி.

தாதாபாய் நௌரோஜி (தாதா)

அநுபல்லவி.

தந்தாராதர வந்தேமாதர (தாதா)

சரணம்.

மாதாபிதா குருவாய்
வணங்குந்தெய்வத் திருவாய்
மாக்ஷிமையுறு மிந்தியருஞ்சுய
ராஜ்ஜியம்பெறு மந்திர மோதிய (தாதா)

தொகையறு.

தேசாபிமானிகளின் தலைவராயவதாரஞ்
செய்ததோர் செல்வச் சீமான்
ஜெகமெல்லாம் புகழ்கின்ற ரிஷியான கலியுகச்
சித்தவை ராக்ய பூமான்

(பாட்டு ஷ சரணத்தொடர்)

பக்தர்கொண் டாடுஞ்சிங்கம்
பத்தரை மாற்றுத்தங்கம்
பாமணங்கமழ்ந் திலங்கும் பாஸ்கர
சாமிசெந்தமிழ்க் குகந்த சற்குண (தாதா)

---

11. அடுக்குமல்லிகை என்ற மெட்டு.

இராகம் - செஞ்சுருட்டி - தாளம் - ஆதி.

கண்ணிகள்.

சுதந்தரமென்னும் விதையை நாட்டினார்
தாதாநௌரோஜி
துணிந்திந்தியர்க்கு வழியைக்காட்டினார்-அது
துளிர்த்துப்பூமியில் தளிர்த்துத்தீங்கனி
பழுத்துநிற்குது களித்துப்புசிக்கச் (சுத)

மூதிர்ந்துநிறைந்த தேசபக்தியே-திரண்டுதித்த
மூர்த்தியின்தெய் வீகசக்தியே-இந்த
மூவுலகினு மேவியபுகழ்
பூவுலகினுக் கேவியப்பருள் (சுத)

நமக்குப்பிரதி நிதித்துவம் வகித்தார்-இந்தியதேச
நன்மையாவும் செம்மையாய்த்தொகுத்தார்-லண்டன்
நாடிப்பார்லிமெண்ட் கூடும்சபையில்
ஈடில்லாஉரை யாடியமஹான் (சுத)

தமக்கொருதலை மகனெனப் பயந்தாள்-பாரதமாது
தருமநெறியி னருமையே நயந்தாள்-எங்கும்
சாதகம்பெற ஓதும்பாஸ்கர
கீதமிங்கிவர் மீதுபாடவே (சுத)

---

# லோகமான்ய பாலகங்காதர திலகர்.

12. எஜித்தாதர்ப்புதேரி என்ற மெட்டு.

இராகம் - தேசிக சுருட்டி - தாளம் - ஆதி.

பல்லவி.

இந்திய தேசபக்தன்
என்றென்றும் லோகமான்யத்திலகர் (இந்தி)

அநுபல்லவி.

செந்திருமகள்வாசன்-சு
தேசவிரதப்பாசன்-புகழ்
சிகாமணி நேசன்
தெய்வம்போற்பிரகாசன்-ராஜ
தேசபக்தன் (இந்தி)

பூமிக்கேயொரு திலகம்
புண்யசொரூபத்திலகம்-கமழ்
பாமிக்கநவில் திலகம்-நம்
பாஸ்கரத் திலகம்-தமிழ்த் தேசபக்தன் (இந்தி)

---

## 13. துலங்கு செம்பொன் என்ற மெட்டு.

இராகம்-செஞ்சுருட்டி-தாளம்-ஆதி.

### பல்லவி.

கனிந்துவந்தே மாதரமாதங்
கம்லோக மான்ய பால
கங்காதரத்திலகமே
அஞ்சாத பால
கங்கா தரத்திலகமே (கனி)

### அநுபல்லவி.

கங்கண செங்கை விளங்கிமு ழங்குசிங்
கம் லோக மான்ய பால
கங்காதரத்திலகமே-அஞ்சாதபால
கங்காதரத்திலகமே (கனி)

கருத்துட னரசியல் திருத்தவு முரைத்ததங்
கம் லோக மான்ய பால
கங்காதரத்திலகமே-அஞ்சாதபால
கங்காதரத்திலகமே (கனி)

காசினிக்கு ளேமிகுத்த தேசபக்தி பேசும்ப்ரசங்
கம் லோகமான்ய பால
சங்காதரத்திலகமே-அஞ்சாதபால
கங்காதரத்திலகமே (கனி)

சரணம்.

முனிந்தறியாமன மோகனரூபன்
மூவரும்புகழ்ந்திடும் தேவப்ரதாபன்
இனிந்தநற்சுதந்தர வியக்கத்தின்மார்பன்
எழில்மிகும்பாஸ்கரன் மொழிதமிழ்த்தீபன்
இந்துமதத்துக்கேதூபன்
இன்பசல் லாபன் (கனி)

---

## கவிச்சக்ரவர்த்தி

## ஸ்ரீமான். ரவீந்திரநாததாகூர்.

14. பஹாரியாலா என்ற மெட்டு.

இராகம் - தேசிகத்தோடி - தாளம் - ஆதி.

பல்லவி.

ரவீந்த்ரநாத—தாகூர் ரம்ய நன்னீத (ரவீ)

அநுபல்லவி.

கவீந்த்ரகீத ஞங்கிலத்திற் கற்கண்டொக்கும் வாக்யன்
கலைமகள் தலைமக னெனுஞ்சிலாக்யன்
இந்துக் கன்பின் பாக்யன் (ரவீ)

நவீனசித்த தேசபக்த ராஜசிங்கவீரன்
நலம்பெறு சுதேசமக்கள் நம்புதீரன்
சாஸ்த்ர ஞானதாரன். (ரவீ)

சத்யாக்கிரக ஒத்துழையாத் தத்துவவிசேஷன்
தந்த "சர்ப்" பட்டந்தன்னையெ றிந்தரோஷன்
சாது சங்க வாசன் (ரவீ)

வித்தியாச மின்றியாரும் விரும்பிடும் விவேகன்
வெற்றிசேர் பாஸ்கரன்பாடி மெச்சும்யூகன்
மேலும் இச்சைத்யாகன் (ரவீ)

---

15. தேக்கமேரியாலா சோபன்ஸீ என்ற மெட்டு.

இராகம்-இந்துஸ்தான்பியாக்-தாளம்-ஆதி.

பல்லவி.

கவிச்சக்ரவர்த்தி ரவீந்த்ரநாதனே
பாரதமாது
கண்ணான சங்கீதனே. (கவி)

அநுபல்லவி.

புவிக்கு நல்லாதரன் புனிதர் சகோதரன்
போற்றிடும் வந்தேமாதரன் (கவி)

சரணம்.

பஞ்சாபி லஞ்சாப்படு கொலையைக் கண்டனே
பகரும்பிர சண்டனைப்
பாஸ்கரன் வாக்கின் பண்பார் தொண்டனைப்
பயமற நயமுற ஜெயம்பெறப்
பணிதற்கேது தண்டனே (கவி)

## அலிசகோதர ஸ்ரீமான்கள்.

16. மயிலேஉன் சாயல் கொண்ட என்றமெட்டு.

இராகம்-இந்துஸ்தான்தோடி-தாளம்-ஆதி.

பல்லவி.

சுதேச மகம்மதலி சோதர ஷவுக்கத்தலி (சுதே)

அநுபல்லவி.

இதோப தேசஞ் சொலி
இசையல்லாகு அக்பரோலி (சுதே)

சரணம்.

மதாபிமான சித்தர்
மாருத தேச பத்தர்
வாஞ்சைக் கிலாபத்தின் போர்
தாஞ்செய்யுஞ் ஜீவன் முத்தர் (சுதே)

தோஹைரு.

அஞ்சாத இந்திய மாதாவின் நேத்திரம்
ஆகவே வந்த புண்யர்
அவனிமேல் நமக்காகச் சிறையேகிமீண்டதோர்
அவதாரபுருஷ கண்யர்

(ஷை சரணத்தொடர்)

உயர் தவக் காந்தி செப்பும்
உதவி மறுத்த லொப்பும்
உண்மைத் தொண்டன் பாஸ்கரன்
ஒங்கும் செயல் பரப்பும் (சுதே)

## 17. கவுனமிஸியார என்ற மெட்டு.

இராகம் - செஞ்சுருட்டி. தாளம் - ஆதி.

### பல்லவி.

முகம்மதலி ஷவுக்கத்தலி மொழிகேட்பாய்செவியே-முஸல்
மான்கள்குலப் பாங்கதனைத் தாங்குமதிரவியே

மாட்சிமை சேர்புவியே-சுய
ராச்சிய உதவியே-நாம்
மாசறப்பெற் றோங்கச்செயும்
மகிபரைக்கை குவியே (முகம்)

துருக்கி சுல்தான் தனைக்குருவாய்ச்
சொல்லும்வேத மந்த்ரன்-ஒரு
தோஷமில்லாத் தேசபக்த
நேச ராஜ தந்த்ரன்

சோபிதகி ரந்த்ரன்-கி
லாபத்திற்கே யந்த்ரன்-மலர்
தூவிப்பலர் கூவிப்புகழ்
ஜீவிய நரேந்த்ரன். (முகம்)

காந்திமஹான் ஒத்துழையாக் கட்டளைப்ரகாரன்-வெகு
கவனமுடன் புவனமெல்லாம் பவனிசெய்ப்ரசாரன்

கண்ணியவித் தாரன்-திட
காத்திரவு தாரன்-மணங்
கமழ் மதுர பாஸ்கரன்சொல்
தமிழ் பெறுங் கெம்பீரன் (முகம்)

## ஸ்ரீமான் யாகூப் ஹாசன்.

18. செந்தில் குமரவேளுண்டு என்ற வர்ணமெட்டு.

இராகம்-செஞ்சுருட்டி. தாளம்-ஆதி.

பல்லவி.

சென்னைக் கிலாபத்தின் நேசன்
யாகூப்பு ஹாசன் (சென்)

அநுபல்லவி.

(அடுக்குச்சந்தம்.)

ஜெகமதிலிந்தியர் சுகமுறநம்பிய (சென்)

திருக்கரங்குவித் தனுதினமதகுரு
துருக்கிமன்னரின் பெயர்முழங்கிடவரு (சென்)

சிரமத்துடனெத் துழையாவிரதக்
கிரமத்தினைவிட் டகலாவரதச் (சென்)

சித்தத்துணிவொடு மெத்தப்பிரபல
சத்யக்கிரகவி ருத்திப்புரவல (சென்)

சேரப்பதிகள்ளிக் கோட்டையில்நம்மோர்
தீரப்படச்சிறை யேற்றருள்பெம்மான் (சென்)

சரணம்.

அன்னை பாரத தேவி
யகத் தேகிய சஞ்சீவி
தன்னுடல் பொருளாவி
தத்தஞ் செய்யு மேதாவி
சங்கத்தமிழ் மது ராபுரி பாஸ்கர
சந்தத்தமிழ் மொழி போலவைராக்கிய (சென்)

## கள்ளிக்கோட்டையில் கைதி செய்து கண்ணனூர் சிறக்கூடமாகிய தேசியமறைக்கூடம் வசிக்கும் மஹான்கள் நால்வர் துதி.

19. பாலபிஷேகப் பழனிமலையப்பன் என்ற மெட்டு.

இராகம்-சிந்துபைரவி: தாளம்-சாப்பு.

பல்லவி.

பாரத யாகுப்புசேன் மாதவநாயர்
பகர் கோபால் மேனன் மொஹிதீன்கோயர் (பார)

அநுபல்லவி.

கேரளக் கள்ளிக்கோட் டைக்கண்ண னூர்ச்சிறைக்
கேகிய யூகத் தியாக நேயர் (பார)

தோஹைரு.

காந்தி மஹான் சொன்ன
கட்டளைப் பிரகாரமே
சாந்தி சஹா வென்னும்
சாத்மீகப் பிரசாரமே

சரணத்தொடர்.

கடமையைச் செலுத்திடக் கருதுபன்யாசம்
தடைபுரிந் தடையச்செய் தார்சிறைவாசம்

ஷை பல்லவி யெடுப்பு.

காரணமில்லாத தோரணைச்சட்டமே
தாரணியிற் கொட்டுந் தம்பட்டமே. (பார)

தோஹைரு.

சுயராஜ்யமில்லாத வகையினாலிவ்விதத்
துன்பத்தி லாழுகின்றோம்
ஜெயராஜ்யமிந்தியா சீக்கிரம்பெறவிதே
திருட்டாந்தம் நேர்ந்ததென்றோம்

ஷ சரணம்.

சுகந்தரத்துடனவர் நால்வரை நமக்கே
சுகமுடன் தரவந்தே மாதரத்தமுக்கே

ஷ பல்லவி யெடுப்பு.

தூங்காம லெங்கு முழங்குது பாஸ்கரஞ்
பாங்கான சந்தப் பதக்குமுக்கே. (பார)

---

## ஸ்ரீமான்
## கோபாலகிருஷ்ணகோகலே.

20. புத்தானியரமோரி என்ற மெட்டு.

இராகம்-தேசிகம். தாளம்-ஏகம்.

பல்லவி.

கோபாலகிருஷ்ண கோகலேஇந்துச
கோதரனே — வந்தே
மாதரனே — நமக்
காதரனே — ஜெய (கோ)

அநுபல்லவி.

பூபாலம் பாரத புத்ரனகத்தியஸ்
தாபன வித்யா போதன் (கோ)

தோஹைரு.

தேசீயக் கொள்கையைச் சிரமேற் புனைந்தென்றும்
செய்த கல்விப்ரசங்கன்
திக்கெல்லாஞ் சுயராஜ்ய சக்கரம் நெறிநிற்கத்
திடந்தந்த கீர்த்திசிங்கன்

அநுபல்லவி யெடுப்பு.

தித்திக்கு முத்தமிழ் க்ஷேத்திரமதுரத்
தேவேந்த்ர பாஸ்கரகீதன் (கோ)

21. நாபோவுத்தாரத்தாரா என்ற மெட்டு.

இராகம்-தேசிகபியாக்-ஆதி.

கோபால கிருஷ்ணக் கோமான்
பூபாலர் மெச்சும் ஸ்ரீமான் (கோ)

அநுபல்லவி.

மாபாரதப் புதல்வன் மாறுத்தேச முதல்வன்
இந்து—மார்க்கத்தின்கல்வி
பெறத்—தீர்க்கத்தில்நல்கி (கோ)

சரணம்.

தக்ஷண தேசத்து லட்சணக்கணக்கை
நக்ஷத்திரம் போல் பரிக்ஷித்தார் சீமையில்
சட்ட சபையில் பெற்றூர்
பட்டம் செந்
தமிழரசர்கள்நிறை பதியுறைபாஸ்கரன்.
கமழ் திரு மொழி திட்டம். (கோ)

## ஸ்ரீ பாபுவிபினச் சந்திரபால்.

22. எந்தன் சிங்காரக்கோகிலம் என்ற மெட்டு.

இராகம்-செஞ்சுருட்டி. தாளம்-ஆதி.

பல்லவி.

பாபுவிபினச் சந்த்ரபால்
பக்தன் சுதேசப் (பாபு)

அநுபல்லவி.

தீர்ப்புச்செய்யும் வில்ஹெட்முன்
சிப்பு ராமச் சந்த்ரபால்
காப்புச்சுத ஜூகக்கை
கூப்பும் பிர்ம்மசமாஜப் (பாபு)

தோஹரு.

மேஞடுமுழுவதுந் தாஞகவேசுற்றி
மேன்மையைப் பெற்றவீரன்
வேதாந்த சித்தாந்த விற்பனன் சுயராஜ்ய
வீடுபெற வேண்டு தீரன்

அநுபல்லவி யெடுப்பு.

மேலும் தேஞேடுசீனி
பாலும் ஞானமுப்பழம்
போலும் கானபாஸ்கர
நாலும் மெச்சும் பிரசங்கப் (பாபு)

---

23. சரசக்காரமாமா என்ற மெட்டு.

இராகம்-சுருட்டி. தாளம்-ஆதி.

கண்ணிகள்.

பாபு-விபினச்சந்த்ரபாலன்
வி-வேகத்தந்த்ரசீலன்-பாபு (விபி)

இந்து-வேதமே பிரமாதமதமென்
றோதுபாரத மா தருந்தவ (விபி)

(தொகையறா விருத்தம் மாதிரி எடுப்பு)

கல்கத்தாவஸிடிஹாலில் காளிசரணப்பானர்
கருதியன்பு
பல்கத்தான் பிறமதத்தைப் பகரவேதாளாத
பாபுஆர்யச்
செல்வத்தாருயிர்க்குயிராம்தேர்ந்தஇந்துமதப்புகழைச
சிறக்கப்பேசி
நல்கத்தான் வங்காள நாட்டினீளஞ் சிங்கமென
நவின்றார்மாதோ

கண்ணித்தொடர்.

பொதுஜன அபிமானி—இதம்
போதிப்பதில் நிதானி—இன்னும்
பூர்வபழக்கச் சீர்திருத்தத்தில்
ஆர்வமிகுத்த பேர்படைத்திட்ட (விபி)

(ஷை தொகையறா விருத்தம்)

அயல்நாட்டு வியாபாரம்சரக்கில்நயம் விலைசரஸ
மானாலுந்தான்
சுயநாட்டார்வாங்குவது கூடாதென் றெடுத்தோதிச்
சுதேசமக்கள்
செயல்நாட்டக் கைத்தொழிலை விருத்திசெய்யவேண்டு
மெனத் தெரிவித்தாரிந்
தியநாட்டுச் சுடர்மணியா யென்நாளும் வாழ்ந்துவர
வேத்துவோமே

(ஷை கண்ணித்தொடர்)

முப்பத்துமூன் றுகோடி—ஒரு
முகமுறச்சபைகூடிச் சொன்ன
முத்தமிழ்ப்பாஸ்கர னித்தம்புகழ்ந்திடும்
ஒத்துழையாவிர தத்துக்குகந்திடும் (விபி)

---

# ஸ்ரீமான் பண்டிதமோதிலால்நேரு.

24. பாண்டியன் ஈன்றமீனாக்ஷி என்ற மெட்டு.

இராகம்-அமீர்கல்யாணி தாளம்-ஆதி.

பல்லவி.

பண்டித-மோதிலால் நேரு—சுதேசப்
பக்திக் கிணையாரு (பண்)

அநுபல்லவி.

கண்டிதம் பேசுமகமேரு—காருண்யக்
கற்பகத் தாரு (பண்)

தோஹரு.

பலகாலுமிந்தியா பண்புபெற்றோங்கிடப்
பகுத்தசீர் திருத்தஞ்செய்வோன்
பக்தமித்திரனை சத்தியாக்கிரகமே
பழகிமென்மேலு முய்வோன்

பல்லவி யெடுப்பு.

பஞ்சாயம் கூட்டும் பிரசங்கன்-நெஞ்சுக்கங்
காட்டும் வரதுங்கன் (பஞ்)

அநுபல்லவி யெடுப்பு.

அஞ்சாத கீர்த்திக்கொரு அங்கன்-கல்வியில்
அதிகஆண் சிங்கன் (பண்)

தோஹரு.

சாத்மீகப் போராட்டத் தளகர்த்தவ்கையிலே
சார்ந்த சேனுதி வீரன்
சாந்திபுரி நம்மஹான் சாந்தியடியாணையைத்
தலைமேற் சுமந்த தீரன்.

பல்லவி யெடுப்பு

சாற்றுவோம் பாஸ்கரகீதம்—எப்போதும்
தத்துவப் போதம் (சாற்)

அநுபல்லவி யெடுப்பு.

போற்றுவோம் புண்யத்தமிழ்வேதம்-சுயராஜ்யப்
புனிதப் பிரசாதம் (பண்)

## ஸ்ரீபாபு ஆனந்தமோகன் போஸ்.

ஆனந்தமானந்தமானந்தமே பர என்ற மெட்டு.

25 இராகம்-இந்துஸ்தான் தோடி தாளம்-ஆதி.

பல்லவி.

பாபு-ஆனந்த மோகன போஜப்ர தாபனே (ஆன)

அநுபல்லவி.

அன்புடன் வங்காளப்பதி
தென்புறப் பிறந்தநிதி (ஆன)

சரணம்.

ஞானந்தனிற் சிறந் தானந்தப்புனிதன்
ராஜரீகச்சட்டம் பேசு நூற்கணிதன்
தானந்தவங்கள் தழைக்கச்செய்வனிதன்
தக்க பழக்க முழக்க விலக்கண (ஆன)

தோஹைறு.

இந்தியப்பாலிகா பாலரும் பயிலவே
இயற்றினன் கல்விச்சாலை
இன்றவரையவைநலங்குன்றாது தேசமுன்
னேறவோங்குது மென்மேலே

சரணத்தோடர்.

எங்கும்புகழ்பெற்ற மங்களநேமி
ஏற்றுஞ்சுதந்தரப் பேற்றைக்கொள்க்ஷேமி
சங்கமா மதுர பாஸ்கரசாமி
சத்திய விர்த்தியை நித்தியம் நத்திய (ஆன)

---

## ஸ்ரீமான் ராஷ்விகாரி கோஷ்.

26. திரு-மாம்துரவாசனி என்ற மெட்டு.

இராகம்-மால்கோஷ். தாளம்-ஆதி.

பல்லவி.

சுதேச ராஷ் விகாரி கோஷ்
சுகிர்த மகபதி சபாஷ் (சுதே)

அநுபல்லவி.

தீக்ஷண்யக்கல்விக்கடாட்சம் பெற்றது பாஷ்
திகழ்கொடை இசம்புகழும் பேஷ் (சுதே)

சரணம்.

மாசில்லாத சட்டமே வகுத்ததாகுந்திட்டமே
மண்மீதுமென்மேலும் தன்மராஜப்பட்டமே
வழங்குவதறிந் திட்டமே (சுதே)

பாரதப்புவி யோகனே பலவிதத்திலுந் தியாகனே
பாமிக்கப் பாஸ்கர சாமிசொல் யூகனே
பகுத்தறியும் விவேகனே (சுதே)

---

## ஸ்ரீ பிரோஜிஷாமீர்வான் ஜீமேடா.

27. லக்காரிச்சல்மியான்சலோ என்ற மெட்டு.

இராகம்-இந்துஸ்தான்பியாக். தாளம்-ஆதி.

பல்லவி.

பிரோஜிஷாமீர் வான்ஜீமேடா
பிரபலர்க்காரு மீடா (பிரோ)

அநுபல்லவி.

பெருத்த ஞானமே பேசும் ஆசு நிதானமே
பிறந்திடும் அறந்தனிற்
சிறந்திடும் நிரந்தரன்
பிதாகுரு பதாம்புயம்
சதாதுதி புரந்தரன் (பிரோ)

தோஹைரு.

பேதமையறவே சாதகமடையும்
மேதகைத்தொழிலை ஓதினரே

ஏகதாள எடுப்பு.

பல-பேர்புகழ் சோதரச் சீர்திக ழாதரப்

அநுபல்லவி எடுப்பு.

பெருமைசூடினன் மன்னர்பேட்டிக்கன்புகாட்டிக்கூடினன்
பிழைத்திடுஞ் சுதேசமே
தழைத்திடும் உத்தேசமே
பின்னமில்லாத பாஸ்கரன்
சொன்ன தமிழின் வாசமே. (பிரோ)

# சுவாமி சிரத்தானந்தா.

28. ஆண்டவா ஆடேந்தில்லைத்தாண்டவா என்ற மெட்டு.

இராகம்-தேசிகதோடி-தாளம் ஆதி.

பல்லவி.

ஞானந்தா சுவாமி சிரத்தானந்தா (ஞா)

அநுபல்லவி.

நாடெங்குந் தேசியங்
கூடுஞ்சந் தானந்தா
ஸ்வாமிசிரத் தானந்தா (ஞா)

சரணம்.

மானந்தரப்பஞ்சாப்பில் மார்புதந்துநின்ற
மகேந்த்ரா - மகேந்த்ரா - மகேந்த்ரா - மகேந்த்ரா
மதிக்குமிந்திய மக்கள்மனமிகக்
கொதிக்கக்கொன்றிடும் துர்க்குணடையர்க்கு (ஞா)

மோனந்தவறிடாது முற்றிலும்பொறுத்த
மூர்த்தியே - மூர்த்தியே - மூர்த்தியே - மூர்த்தியே
முப்பத்துமுக்கோடி சற்புத்ரரைப்பெற்ற
அப்பனேயடிமையின் துற்பவமகற்று (ஞா)

தானம்புரிந்த காந்தி சாத்மீகப்ரசாரத்
தங்கமே - தங்கமே - தங்கமே - தங்கமே
தத்வசு ராஜ்ஜிய ஒத்துழை யாப்பொருள்
நத்திய பாஸ்கர சத்தியாக்கிரக (ஞா)

# ஸீ. ஆர். தாஸ் என்னும் ஸ்ரீமான். சித்தரஞ்சன தாஸ்.

29. முத்தமிழ் வித்வகல்யாணி என்ற மெட்டு.

இராகம்-இந்துஸ்தான்பியாக்-தாளம்-சாப்பு.

கண்ணிகள்.

சாத்மீக சித்தரஞ்சன தாஸ்-மஹாத்மா
சத்யநேச துபாஷ்
பார்த்திபன் வித்வஞானஞ் சபாஷ்-பாரத
பக்திமார்க்கமே பேஷ் (சாத்)

சீர்த்திசேர் கல்விச் சஞ்சீவி-தேசியக்
கிரீடமேதாவி
பூர்த்தியா யிந்தியர் மேவிப்-பூரிக்கும்
புண்யநல்லாவி (சாத்)

நாகப்பூர் மாசபைச் சங்கம்-தன்னுண
நம்புமோர் அங்கம்
த்யாகப்போ ராடுமாண்சிங்கம்-தெய்வீகத்
தீரஞ்சேர் தங்கம் (சாத்)

மோஹன வசியசிங்காரன்-வங்காளர்
முன்னிற்கும்வீரன்
மாகனந் தங்கு மொய்யாரன்-பாஸ்கரன்
வாழ்த்துங்கெம்பீரன் (சாத்)

30. கல்யாணஞ் செய்துவையுமே என்ற மெட்டு.

இராகம்-இந்துஸ்தான்பியாக். தாளம்-ஆதி.

பல்லவி.

சித்த ரஞ்சன தாஸனே—இந்து
தேசத் தொண்டுபுரிய
நேசங் கொண்டபெரிய (சித்த)

அநுபல்லவி.

சத்தியாக் கிரகந் தனிலன்புகூடி
சாத்மீகப் போர்முனை தனக்கொருக்ரீடி
ஒத்துழையாமையின் தத்துவஞ்சூடி
ஓங்குசுதந்தரம் வாங்குவர் நாடி (சித்த)

சாந்த மஹாத்துமா காந்தியின் சீஷன்
தரணியிற்குலநலந் தழைக்கச்செய்ரோஷன்
வாய்ந்தமந்ரவந்தே மாதரகோஷன்
மதிக்கும் வங்காளப்பொன் பதிக்குப்ரகாசன் (சித்த)

இந்தியர் தூக்கம்விட் டெழும்படிவேதம்
இரவும் பகலும் புரிவான் சங்கநாதம்
செந்தமிழ் பாஸ்கர சாமி சங்கீதம்
செகத்தினில் மகத்துவ மிகுத்தநற் போதம் (சித்த)

# சேலம் ஸ்ரீமான், விஜயராகவாச்சாரியார்.

31. ஏமாந்துனிமுத்து என்ற மெட்டு.

இராகம்-தேசிகமுகாரி. தாளம்-ஆதி.

பல்லவி.

மாவிஜய ராகவச் சக்ரவர்த்தியே (மா)

அநுபல்லவி.

மகிபன் சுதேச பக்தியே நவசக்தியே (மா)

சரணம்.

தேவிபாரதமாது செல்வக்குமாரசாது
தெய்வீகக்காந்திசொல்மீது சித்தந்தப்பாது (மா)

நாகபுரிச்சபையின் நாயகமானசிங்கம்
நன்மையாகப் பிரசங்கம் நாடிய தங்கம் (மா)

ஏகமாயொத்துழையா இயக்கத்தின்பிரசாரன்
எவர்க்கும்பயப்படாத்தீரன் இந்தியவீரன் (மா)

தியாகம்பொழிமுப்போகச் சேலப்பதியில்வாசன்
செந்தமிழ்ப்பாஸ்கரநேசன் செப்பும்ப்ரகாசன் (மா)

# சேலம் சக்ரவர்த்தி ஸ்ரீமான்

# ராஜகோபாலாச்சாரியார்.

32. ராமபஜனஹோதியா என்ற மெட்டு.

இராகம்-இந்துஸ்தான்தோடி. தாளம்-ஆதி.

பல்லவி.

ராஜகோபால பேர்சித்தி-நம் சக்ரவர்த்தி (ராஜ)

அநுபல்லவி.

பூஜாபலம் பொருந்தி
புவிக்கு ளெங்குந் திருந்தி
ஆசாரமோங்க வருந்தி
அறைந்தான் முந்தி (ராஜ)

கோமான் பரதபாலன்
குறையகற் றிடும் லோலன்
கூறுஞ்சுதே சாநுகூலன்
கொஞ்சும்வாய்ச் சாலன் (ராஜ)

ஓதுமஹாத்மா காந்தி
உதவிமறுத்த லேந்தி
உலகப்பெருங்கடல் நீந்தி
உகப்பான் சாந்தி (ராஜ)

வேதவிப்பிரச் சிங்கம்
வித்வத் தத்துவத் துங்கம்
கீதபாஸ்கர மெய்த் தங்கம்
கீர்த்திப்ர சங்கம் (ராஜ)

---

## இந்துப் பத்திராதிபர்

## ஸ்ரீமான் கஸ்தூரிரங்கையங்கார்.

33. அச்சாமோரி லாகீசே என்ற மெட்டு.

இராகம்-தேசிக-தோடி. தாளம்-ஆதி.

பல்லவி.

ஒத்துழையா வீரன்
கஸ்தூரி ரெங்கதீரனே (ஒத்)

அநுபல்லவி.

தீரனே சமத் காரனே (ஒத்)

சரணம்.

பத்திரிகை இந்துவிலே
பலரறியத் தந்துகலைப்
பதிப்பேற-மதிப்பேறத்-துதிப்பேறவே (ஒத்)

சத்தியமுங் கௌரவமும்
தன்மதிப்புந் தைரியமும்
தணியாத-பணியாத-மணிவாசகன் (ஒத்)

சித்தத்துணி வானவனே
சென்னைச்சபை நாயகனே
ஜெயசீர்த்தி-உயர்கீர்த்தி-பயில்மூர்த்தியே　　(ஒத்)
முத்தமிழ்ப் பாஸ்கரசாமி
முழங்கும் ப்ரசங்கநேமி
மூதண்ட-மேகொண்ட-மாதொண்டனே　　(ஒத்)

---

சுதேசமித்திரன் பத்திராதிபர்

## ஸ்ரீமான் அரங்கசாமி ஐயங்கார்.

34　கபரதரஹா என்ற மெட்டு.

இராகம்-இந்துஸ்தான் பியாக். தாளம்-ஆதி.

பல்லவி.

ஸ்ரீ ரங்கசாமி
தேசுற்ற-சுதேசமித்ர　　(ஸ்ரீ)

அநுபல்லவி.

தீரவீரஜெய பாரதப் புதல்வன்
தேசத்தொண்டில் முதல்வன்-உண்மை
செப்புவதி லொப்பில்லாத　　(ஸ்ரீ)

சரணம்.

பாரெங்கும் ஒத்துழையாப் பரமசாத்மீகப்
படைதிரட்ட எழுதுங்கொடை யுத்தியோகப்
பேரெங்கும் புகழ்ந்திடப் பிரபலத்தியாகப்
பிர்மகுலச் செம்மலெனுந்
தர்மயுத்த மர்மயோக　　(ஸ்ரீ)

உத்தமவேத வந்தேமாதர முழக்கம்
ஓயாதுசெய்துவரப் போதிக்கும் வழக்கம்
பக்திநிறைமதுர பாஸ்கரன் பழக்கம்
ப்ாடிச்சுய ராஜ்ஜியத்தைத்
தேடிச்செய மாக்குஞ்சத்ய (ஸ்ரீ)

---

## தேசபக்தன் பத்திராதிபர் ஸ்ரீமான் சுப்பிரமணிய ஐயர்.

35 சேந்தின்மாநகர்வாழ் கந்தநாதனிரு என்ற மெட்டு.

இராகம்-செஞ்சுருட்டி தாளம்-சாப்பு.

கண்ணிகள்.

இப்பரததேச மெய்ப்பக்தனுக்கரு
மைப்பத்தி ராதிபனே-மர்மச்
சுப்ரமண்யத் தீபனே-நாடு
ஒப்புக்கொள்ளும் பூபனே-பூர்வ
இந்தியா நலத்தைச் சிந்திப்போர் தமது
புந்திசேர்ப்ரதாபனே. (இப்)

கற்பகத்தருவை ஒப்புங் காந்திமகான்
செப்பும் வேத மந்த்ரனே-பலர்
நட்புக்கேற்ற சுந்த்ரனே-உண்மை
வைப்புக்கோர்சு தந்த்ரனே-தேச
கைங்கர்யத்தைப்பகி ரங்கவிர்த்திசெய்யும்
பங்கமற்ற தந்த்ரனே (கற்)

நாகப்பூரில் செய்த　யூகத்தீர்ப்பெனுஞ்சாத்
மீகப்போரின்　வீரனே-சமர்த்
நாகப் பேசுந்　தீரனே-என்றுந்
த்யாகமாகு　பேரனே-இந்து
நாட்டின் துன்பங்களை ஓட்டிஇன்பவழி
காட்டிக்காக்குஞ் சூரனே　(நாக)

யோக தத்துவத்தின் பாகவித்துவத்தை
யோதுகின்ற　நன்மையான்-தமிழ்
மாதுபெற்ற　தன்மையர்ன்-ஞானச்
சாதுசித்த　வன்மைய்யான்-இன்ப
மூட்டும் பாஸ்கரனின் பாட்டுக்காகச்சபை
கூட்டும் பேருக்குண்மையான்　(யோக)

---

தமிழ்நாடு பத்ராதிபர் திருப்பூர், ஸ்ரீமான்

## டாக்டர் வரதராஜுலு நாயுடு.

36　அமாரநபி என்ற மெட்டு.

இராகம்-இந்துஸ்தான்கவாய் தாளம்-ஆதி.

பல்லவி.

வரதராஜன்　ராஜ　வைத்யசமாஜன் (வரத)

அநுபல்லவி.

வரதராஜன் தேச　விரதராஜன்
ராஜவைத்ய　சமாஜன் (வரத)

சரணம்.

பரதநாட்டுச் சுதேசன்
பண்டைத்திருப்பூர் வாசன்
சரதவித்வப்ர கர்சன்
சாற்றுஞ் சுயாட்சி நேசன் (வரத)

தோஹரு.

சன்யாச காந்தியின் சாத்மீகப்போரிலே
சைன்யாதிப் பட்டம் பெற்றோன்
தர்மமே ஜயமெனும் மர்மமொத்துழையாத
தத்துவத்திட்டங் கற்றோன்

சரணத்தொடர்.

தரணி யெங்கும் ப்ரசங்கம்
தளராது செய்யுஞ் சிங்கம்
திரமிகுந்த பாஸ்கரத்
தியாகத் தொண்டரின் தங்கம் (வரத)

---

## பதிப்பாசிரியர் வாழ்த்து.

பாலபிஷேகப் பழனிமலை என்ற மெட்டு.

இராகம்-தேசிகபியாக் தாளம்-சாப்பு.

கண்ணிகள்

கோடீஸ்ப, ரனெங்கள் கோபால் கிருஷ்ணக்
கோனும்மஹானெனக் கொண்டாடுவோம்
கோவையு லாமட லாலேமே லாமெனக்
கோலாக லத்தமிழ்ப் பண்பாடு வோம்

பாடும்பு லவர்தம் பாவணி மார்பன்சீர்
பாலித்த வற்றாத பாக்கியவான்
பற்பல புத்தக வர்த்தக விர்த்தியில்
பாரெங்கும் கீர்த்திசி லாக்கியவான் (கோ)

தொஹரா.

பாண்டிமா மதுரைவாசன் பாஸ்கரன் பகருல்லாசன்
வேண்டுவார்க் குதவுநேசன் விற்பன குணப்பிரகாசன்

முடுகு சந்தம்.

பாரிய பிரபல வணிகநற் பெருமை
பரவிய அவனது பெயரொரு அருமை

பல்லவி யெடுப்பு.

பாங்கான கோகுலத் தேயுதித் தோன்புத்ர
பௌத்ர சம்பத்துடன் வாழியவே (கோ)

---

மாதுபாகமானவா என்ற மெட்டு.

இராகம்-நோட். தாளம்-ரூபகம்.

கண்ணிகள்.

சீலராமசாமிக்கோன் சீர்மிக்கோன் நேர்மிக்க
சேமமே நிலைபெறும் சீவகாருண்யமிக்கோன்
தேனார் சந்தமே சிந்திய செந்தமிழ்மிக்கோன்
திசைமுழுதும் இசைபரவும்
திருஉடையான் ஒருகொடையான்
தீனதயாபரன் தேசிய பாஸ்கரன்
செப்புபா ஒப்பிய (சீல)

---

# மங்கள வாழ்த்து.

தேன்கூடலம்பதிவாழ் என்ற மெட்டு.

கண்ணிகள்.

நித்யும் ஜெய மங்களமே
நீடிக்கு மெங்கினுமே
சுத்தப்பர த்தலமே
சுயராஜ்யப் பலமே
நேசநிதானிக்கும் தேசாபிமானிக்கும்
நேமிக்கும் பாஸ்கர சாமிக்கும் பூமிக்கும்
நீதி-காண-ஜோதி-பூண
நிதிபலவும் ததிஉதவும்
மதிஉடையோர்க் கதிதுதியே
நாடெங்கு மிக்கீதம் பாடிக்கேட்போம் நீதம்
நன்ருக-ஒன்ருக- நின்ரேங்கும் போதம்
நாமந்து லங்குஞ்சி மான்கோபா லகிருஷ்ணன்
நயமுறவே-பயமறவே
ஜெயம் பெறவே-சுயவரசியல் (நித்)

---

முதற்பாகம் முற்றிற்று

வந்து விட்டது! உ வந்து விட்டது!!

தமிழ் நாடெங்கும் புகழ்பெற்றுள்ள, கன்னிச்சமீன் சரபம்,

உடுமலை முத்துசாமிக் கவிராயரவர்களியற்றிய

# இராமாயண நவீன நாடகம்.

ஏழுகாண்டங்களும் சம்பூர்ணமாக அடங்கப்பெற்றுள்ளது.

முந்துங்கள்! புத்தகத்திற்கு முந்துங்கள்!!

இகபர சாதனங்களுக்கு இன்றியமையாததும், இஷ்டகாமியார்த்த சித்திபெறச் செய்வதும், ஆகிய இராமாயண காவியத்தை முற்காலத்துக் கவிவல்லோர்கள் பலவித காவியங்களாகச்செய்து, உலகத்தை இன்புறச் செய்திருக்கிறார்கள் எனினும், இவை "தற்கால நாகரிகத்திற்கு அநுகூலமானவையல்ல" என்பது நன்கறிந்த நண்பர் பலரும் விரும்பியவண்ணம் பற்பல அற்புத வர்ணமெட்டுகளாலியற்றப்பெற்ற பாடல்களாலும், படிப்பவர்களுக்குப் பிரத்தியக்ஷமாக நடைபெறுவது போலத் தோற்றும் நாவல்கள் போன்ற சிறந்த செந்தமிழ் வசனங்களாலும் இயற்றப்பெற்று உயர்ந்த கிளேஸ் கடிதத்தில் அச்சிட்டு, ஆப்டோன் என்ற சித்திரப்படங்களுடன் சொற்பக்காப்பிகளே தயாரித்திருக்கிறோம். விலை ரூ 2.

## சிறந்த செந்தமிழ் நாவல்கள்.

| | | | |
|---|---|---|---|
| அன்பின் களஞ்சியம் 1-ம் பாகம் | 1 | 8 | 0 |
| ௸ 2-ம் பாகம் | 1 | 8 | 0 |
| ௸ 3-ம் பாகம் | 1 | 0 | 0 |
| ஜெயசீலன் (அல்லது) அடாதுசெய்பவர் படாதுபடுவர் | 1 | 0 | 0 |
| ஆனந்த மனோகரன் (அல்லது) முயற்சி திருவினையாக்கும் | 1 | 1 | 0 |
| அமிர்தசாகரன் (அல்லது) கோடீசுரனுடையகுமாரன் | 1 | 8 | 0 |
| மதனகாந்தி | 1 | 0 | 1 |
| கோமதி கோகிலமானது | 0 | 40 | 0 |
| பொற்கொடி | 0 | 0 | 20 |

மகா-ள-ள-ஸ்ரீ உடையார் பிள்ளையவர்களியற்றிய,

| | | | |
|---|---|---|---|
| கோவலன் சரித்திரம் 1, 2 பாகங்கள் | 0 | 4 | 0 |
| அல்லியரசாணி சரித்திரம் 1, 2 பாகங்கள் | 0 | 4 | 0 |

முந்துங்கள்! முந்துங்கள்!!

வாங்குவதற்கு முந்துங்கள்!

மதுரைத்தமிழ் வித்துவான்,

ஸ்ரீ நா. கிருஷ்ணசாமிநாயுடவர்கள்

எழுதிய

# சாவித்ரி சத்யவான்

## ஓர் இனிய தமிழ் நாடகம்.

பதிவிரதா சிரோமணிகளான பஞ்ச கன்னிகைகளில் ஒருவராய், தான் அடையப்போகிறநாதன் "அற்பாயுள்உள்ளவன்" என்று முன்னரே தெரிந்தும் அவனையே மணந்து, அவனது ஆயுள் முடிவில் ஆங்கவனுயிரைக் கவர்ந்துசெல்லவந்த எமனையுங் கண்டு, பின்தொடர்ந்து, பல வரங்களைப்பெற்று, ஈற்றில் தன் நாயகன் உயிரையும் மீட்டிக்கொணர்ந்த எல்லாம்வல்ல சாவித்திரி தேவியாரின் சரித்திரத்தை சந்தமிழ் நாட்டுமக்க ளெல்லோரும் பெரும்பாலும் பெண்பாலரும் பக்திசிரத்தையோடு உணர்ந்திருப்பது மிக்கநலமெனக்கருதி, பாரதமுதலிய பெருங்காப்பியங்களின் முறையை அநுசரித்து 'இயல் இசை நாடகம்' என்னும் முத்தமிழமைதியாச் சொற்சுவை பொருட் சுவையுடன் தற்கால நாகரிக வர்ணமெட்டுக்களாலும், நாவல் நடையாலும் பண்டிதரேயன்றி ஏனையரும், பள்ளிக்கூடமாணவர், மாணவச்சிறுமிகள், பெண்பாலரும் எளிதிலுணருமாறு தெள்ளிய நடையில் எழுதப்பெற்றிருக்கிறது.

இதுபடிப்பவர்க்கும், கேட்பவர்க்கும் மிகுந்த உற்சாகத்தையும், ஆனந்தத்தையும் விளைவித்துப் பன்முறை படித்தாலும், கேட்டாலும் திகட்டாதென்பது இப்புத்தகத்தை வாங்கிப் படிப்பவர்க்கே நன்கு விளங்கும். பாடலிற் சிறந்த நாடகாபிமானிகளுக்கும் இது பயன்தரத்தக்கது. இதன் விலை அணா 0—8—0.

மகாத்மா காந்தி தியானமும்

அவரது சரித்திரமும்

சிறந்த சிங்காரப் பாட்டுகளிலமைந்தது. விலை அணா 1

இ. ராமசாமிக்கோன்,

புத்தகவியாபாரம், வடக்காவணிமூலவீதி, மதுரை.